# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உக | திருவள்ளுவர் யாண்டு ககஅக<br>விகிருதி—ஐப்பசி<br>1950—அக்டோபர் | மலர் எ |


## கலைமகள் விழா -1950

தமிழ்த்தாயின் தண்ணருளால் நம் சங்கக் கலைமகள் விழா, நாளிது புரட்டாசித் திங்கள் உரு ஆம் நாள் (11—10—50) புதன்கிழமை தொடங்கி, பத்து நாட்கள், கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு, சிறப்பாக நடைபெற்றது.

### சொற்பொழிவாளர்களும்—பொருள்களும்

திரு. G. தியாகராச பிள்ளை அவர்கள், G. V. M. C., தஞ்சை. —தமிழும் தமிழரும்

,, வித்துவான் ஏகாம்பர நாதர் அவர்கள், வீரராகவ உயர்நிலைப் பள்ளி, தஞ்சை.—தமிழும் அரசரும்

,, ,, கு. சின்னையா அவர்கள், தமிழாசிரியர், கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளி, தஞ்சை—தமிழும் சங்கமும்

,, ,, சி. கோவிந்தராசன் அவர்கள், உமாமகேசுவர உயர் நிலைப் பள்ளி, கரந்தை—தமிழும் சமயமும்

,, T. A. இராமசாமி பிள்ளை அவர்கள், ஆசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை—தமிழும் மடங்களும்

,, T. G. நடராச பிள்ளை அவர்கள், நிலக்கிழவர், தஞ்சை —தமிழும் செய்தித் தாளும்

,, வித்துவான் ந. இராமநாதன் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை—தமிழும் வாழ்வியலும்

,, வித்துவான் ச. பாலசுந்தரம் அவர்கள், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை—தமிழும் மகளிரும்

,, சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள், B. A., L. T., ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்—தமிழும் பிறமொழிகளும்

,, ,, வேல். சம்பந்தமூர்த்தி அவர்கள், தமிழாசிரியர், வீரராகவ உயர்நிலைப் பள்ளி, தஞ்சை—தமிழும் எதிர்காலமும்.

கல்கத்தா பாரதி சங்க அமைச்சர்,

## திரு. P. N. தியாகராசன் அவர்கள்

### அறிக்கை.

---

1950, திசம்பர், நாலாவது வாரத்தில் கொண்டாடப் பெறவிருக்கும் "பாரதியார் பிறப்பு" விழாவை முன்னிட்டுத் தமிழில் கட்டுரைப் போட்டி யொன்று நடத்த முடிவு செய்திருக்கின்றது.

கீழ்க் கண்ட தலைப்புகளுள் ஏதாவது ஒன்று பற்றித் தான் கட்டுரை எழுதப் பெற வேண்டும்.

1. பாரதியாரின் சத்தி வழிபாடு.
2. பாரதியாரின் தத்துவம்.
3. பாரதியாரின் வருணனைத் திறன்.

கட்டுரை 6 பக்கத்திற்கு மேற்படலாகாது. அது 1950, நவம்பர், முதல் நாளுக்குள், அமைச்சர், பாரதி தமிழ்ச் சங்கம், 93/A, ராஷ் பீகாரி வழிநடை, கல்கத்தா 26. (Seeretary Barathi Tamil Sangam, 93/A Rash Behari Avenue Calcutta 26) என்ற முகவரிக்குச் சேரும்படி அனுப்பப் பெறல் வேண்டும்.

சிறந்த முதலிரு கட்டுரைகட்குப் பரிசுகள் வழங்கப் பெறும். முதற் பரிசு ரூபா 60/- பெறத்தகும் பொன் மடலும் இரண்டாம் பரிசு ரூபா 20/- பெறத்தகும் வெள்ளி மடலுமாம். கட்டுரைகளின் வெளியீட்டுரிமை சங்கத்துக் குரியதாகும்.

# இசைத் தமிழ்

---

கும்பகோணம் சங்கீதம் திரு. ப. சுந்தரேசன்,
இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

---

(முற்றொடர்ச்சி துணர் ௨௰௫ மலர் ௰௨ பக்கம் 376)

## கிளையலகும் நட்பலகும்.

---

[மீண்டும் மாணவர்கள் ஆசானைக்காண வந்தமர்ந்துள்ளனர் ஆசானும் வந்தமர்கின்றார்.]

**மாணவன்:-** ஐயா, தங்களால் கூறப்பட்ட கிளைமுறை யலகமைதியை ஒருவாறு அறிய முடிந்தது. தாங்கள் முன்னரே நட்பலகமைதியையும் பின்னர் கூறுவதாகக் கூறினீர்கள். ஆகையால் மாணவர்களாகிய யாங்கள் கிளையலகு கூட்டுமுறையையும், நட்பலகு கூட்டுமுறைறையும் ஒன்றுசேர அறிந்து கொள்ள பெரிதும் ஆசைப்படுகின்றோம்.

**ஆசிரியர்:** ஆம் நாம் கூறியதுண்மையே. உங்கள் கையிலிருக்கும் கருவிகளில் (நான்குகருவிகள்) தனித்தனியே ஒவ்வொரு கருவியிலும் அமைந்துள்ள இசைத்தானங்களையும் அதனலகு எண் அட்டவணைப்படுத்தி பன்னிரண்டிசைத் தானங்களெனக் களையும், அந்தர நரம்புகளின் அலகு எண்களையும் குறித்துக் காட்டியுள்ளோமன்றோ. அவை யாவற்றையும் நீங்கள் நன்கு தெளிவாக அறிந்துகொண்டு விட்டீர்களா?

**மா.** ஆம் ஐயா, நன்கு அறிந்துள்ளோம்.

**ஆ.** அவ்வாறானால் இனி நாம் கூறப்போகும் கிளையலகு, நட்பலகு இவ்விரண்டின் கூட்டுக் கணித முறையில் வரும் அலகுகண்களின் நரம்புகள் எவ்வெவர் கைக்கருவியில், எவ்வெப்பெயரோடு பொருந்தியுள தென்பதைத் தெளிவுபட பிழையின்றி அவ்வப்பொழுது கூறவேண்டும்.

மா. அவ்வாறே கூறுகின்றோம்.

ஆ. ஆனால் நன்கு கேளுங்கள். ஒரு தானத்திடையமைந்த அலகுகள் உ௰உ, அவை ஒரு கிளையும், ஒரு நட்புமாகப் பிரி படுங்கால் ௰௩ம் ௯ மாகப்பிரிபடும். இனி கிளையலகாகிய ௰௩ என்ற எண்ணினை ௰௩ ௰௩ ஆக கூட்டிக் கணித்துப் பார்ப் போமானால் அதனிறுதிக் கூட்டுத்தொகை நட்பலகாகிய ௯ல் முடிவுபெற வேண்டும். அதே போன்று நட்பலகாகிய ஒன்பதை ௯, ௯, ஆக கூட்டிக் கணித்துக் காணுவோமானால் அதினிறுதிக் கூட்டுத்தொகை கிளையலகாகிய ௰௩ல் முடிவுபெற வேண்டும். இதுவே ஒத்த கணித முறையாகும். இங்கு இன்னுமொன்று கூற மறந்தேன். நாம் கூட்டிக் கணிக்கின்ற எண்கள் உ௰உக்கு மேற்பட்டால் அவற்றுள் உ௰உஐக் கழித்துக் கணக்கிட வேண்டும்.

மா. ஐயா, அறிந்து கொண்டோம், தாங்கள் கூறி வருவதை நன்கு கேட்கின்றோம்.

ஆ. முதன்முதலில் கிளையலகுகளின் கூட்டுத் தொகைகளைக் கூறுகின்றேன். கிளையலகு ௰௩, ௰௩ம், ௰௩ம், உ௰௬, இவ்வலகுகளில் தான அலகுகள் உ௰உ கழிபட எஞ்சி நிற்பது ௪ அலகாகும்.

முதற்கருவி மாணவன்: ஐயா ௪ அலகு எனது கருவியில் குரல் நரம்பிற்குரியதாகும்.

ஆ. ஆம் நான்கோடு பதின்மூன்று கூட்ட பதினேழு.

மா. ஐயா, ௰௭ அலகு எனது கருவியில் இளி நரம்பாகும்.

ஆ. ஆம். பதினேழோடு பதின்மூன்று கூட்ட முப்பது ஆகும். தான அலகு இருபத்திரண்டைக் கழிக்க எஞ்சுவது எட்டு அலகு.

மா. ஐயா, எனது கருவியில் துத்த நரம்பிற்குரிய அலகுகள் எட்டு.

ஆ. ஆம், எட்டோடு பதின்மூன்று கூட்ட இருபத்தியொன்று.

(225-ஆம் பக்கம் பார்க்க)

# திருக்குறள்

## பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D.

(முற்றொடர்ச்சி : துணர் 26, மலர் 1, பக்கம் 16)

(3) இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ-ள்) இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும்—சுவாலைத் தொகுதியையுடைய தீயைக் கிட்டுதலும் அத் தன்மையனவாகிய இன்னாதனவற்றையும் தவஞ் செய்வானுவான் தனக்குச் செய்தானாயினும் ; வெகுளாமை புணரின் நன்று—அவன் செய்யும் தவத்தோடு வெகுளாமை புணருமாயின் அது நன்று, ஆகலான் அன்னான் மறத்தல் வெகுளியை எ-று.

இணர் பூங்கொத்து. ஈண்டு அது, இலக்கணையான் சுவாலைத் தொகுதியை உணர்த்தி நின்றது. இணரெரி யென்பது இரண்டனுருபும் பயனுமுடன்றொக்க தொகை. தோய்வு கிட்டுதல். அதனை 'விண்டோயு மிளை கடந்து' என்பதனானு மறிக. அன்ன என்பது குறிப்பு வினைப் பெயரெச்சமுற்று. குறிப்பு வினைப் பெயரெச்ச மெனினு மமையும். எண்ணும்மைகள் விகாரத்தாற் றொக்கன. அத் தன்மையனவாகிய இன்னாதனவாவன, மழையின் நனைதல், வெயிலின் நிற்றல், காற்றின் நடத்தல் முதலாயின.

'முதற்கண் என்னினும் மனவலி குறைந்தார் மாட்டுச் சினத்தைச் செய்யற்க' என்றீர். அவ்வாறே செய்கின்றேன். இனி யான் செய்யக் கடவது யாதாகும் என்றாற்கு 'நினக்கு இன்னாதனவற்றை நீயே செய்தக்காலும் வெகுளிக் காரணங்களை மறந்து வெகுளற்க. இவ் வெகுளியும் முன்னை யதனோடு ஒப்பப் பெரும் பாவம் பயக்கும், ஆகலான்' என்று இக் குறளாற் கூறுகின்றார்.

யாதாயினு மொரு காரணத்தான் ஒருவன் ஓரிடத்தில் தீ வளர்த்து நிற்பத் தன் மாணுக்கனது குறை தீர்க்கும் வண்ணம் அத்தீ யெரியும் இடத்திற் கருகாமைச் செல்லும் நெறிக்கண் திருவருளான் ஈர்க்கப்பட்டுச் சேறல் நேர்ந்த தவத்தவன் ஒருவன் அத் தீயின் அணிமைக்கட் சென்ற போதினும் அவன் உள்ளம் சிவத்தையே நாடி நிற்குமாதல் பற்றி அத் தீயின் வெப்பம் அவனுக்குத் தோற்ருது. ஆயினும் பிராரத்த நுகர்ச்சிக்கண் எழும் தற்போத முனைப்புப் பற்றி இடையிடையே விளங்கும் உடற்பற்றுக் காரணமாக அத் தீயைக் கிட்டுதற்கண் இன்னுமை தோன்றி மிகினும் மிகும். இன்னுமை மிக அத் தீயை வெகுண்டு நோக்கி அது அவியுமாறு தன் மனத்தினுல் சங்கற்பஞ் செய்தாயினும் மொழியினுற் சபித்தாயினும் அவன் நின்ருனுயின், அச் சங்கற்ப சாபங்கள் அத்தீயை அவியச் செய்து அதனை வளர்த்து நின்ருனுக்கு மன நோவை விளைத்து அதனுனே தனக்குப் பாவத்தை உண்டாக்கித் தன்தவங் கடைபோதற்குத் தடை செய்து நிற்பானுகையான். அவ் வெகுளி நன்ருகா தென்று கூறியவாருயிற்று. அன்றி, இணரெரியைக் கிட்டுதலாகிய இன்னுதைச் செய்யுழி அவன் வெகுளாமை கடைப் பிடித்தானுயின், அது தானே அவனுக்குப் பிராரத்த வினை நுகர்ச்சிக்கண் எழுந்த தற்போதங் காரணமாக வரும் ஆகாமிய வினை ஏருமைக்கு ஏதுவாகு மென்பது பற்றி அது நன்ருகு மென்று கூறியவாருயிற்று.

இனித் திருவருளானே வெள்ளிடைச் செல்வானுகிய தவத்தவன் ஒருவன் மீது பல வுயிர்களும் வேண்டி நிற்கும் மழையானது பெய்து அவன் உடம்பை நனைப்ப, அந் நனைத்தற்கண் அவனுக்கு உடற்பற்று விளங்கி அதனை இன்னுததாகக் காணினுங் காண்பன். அவ்வாறு காணின், அவன் அம் மழையை வெகுண்டு நோக்கிப் பெய்யா தொழிக என்பானேல் அது பெய்த லொழியும். ஒழிய, அவன் அதனை விழைந்து நிற்கும் உயிர்கட்குத் தீங்கு புரிந்தவன் ஆவான், ஆகலான் அவனது வெகுளி நன்ருகா தென்றும், அம் மழையை வெகுளானுயின் அவன் அவ் வுயிர்கட்குத் தீமை செய்யாதவன் ஆவன் என்பது பற்றி அது நன்றென்றுங் கூறினுராயிற்று.

இனி வெயிலில் நிற்றல், காற்றின் நடத்தல் முதலிய இன்னா செயினும், வெகுளாமை அவன் தவத்தோடு புணருமாயின் அது நன்றென்பதனை மேற்கூறியாங்குக் கூறிக் காண்க.

மழை பெய்யுழிப் பெய்யென்றும் வெயில் எறிப்புழி எறியென்றுங் கற்பித்துத் தன் நெறியிற் செல்லுமவனே தன் தவங் கடைபோதற் குரியவனாவான். அவன் மாட்டுப் பிறப் பிறப்புக்களைத் தரும் வினைகள் யாவையாயினுஞ் சென்று சாரா. அன்றி, மழை பெய்தக்கால் வெயிலெறிக்க வென்றும், வெயிலெறித்தக்கால் மழை பெய்க வென்றும் மாறி நினைத்தானாயின், அவன் எடுத்த பிறப்பைக் கடைபோக்கா னென்ப தறிக.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'பல சுடரை யுடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தா லொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று' என்னும் உரையைத் தந்தாரெனின், அவர் உவமையும் பொருளும் வேறு வேறு நிற்பக் கூறினாரல்ல ரென்க. எங்ஙனமெனின் கூறுதும். ஒருவன் செய்த இன்னாதது இணரெரியைத் தோய்வித்தலாயின், அவருரை 'இணரெரிவந்து தோய்ந்தா லொத்த இணரெரி தோய்வித்தலை ஒருவன் செய்தானாயின்' என்று செல்லும். செல்ல உவமையும் பொருளும் வேறாகாமை காண்க.

இப்பாட்டு என்னுதலிற்றோ வெனின் 'தவஞ் செய்வானுக்குப் பூதங்களானாய துன்பம் பற்றி வெகுளி தோன்றின், அவன் அவ் வெகுளி காரணமாக இயற்கை யமைப்பை ஏகதேசத்தில் மாற்றி, ஆண்டுள்ள உயிர்களுக்குத் தீங்கு செய்து அதனாற் றனக்குப் பாவம் விளைப்பன். ஆகலான் அவன் தன் தவங் கடைபோதல் விழையின் தன் வெகுளிக் காரணங்களாகிய அத்துன்பங்களை மறந்து வெகுளாதொழிக. எ-து.

(4) ***செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து***
***மில்லதனிற் றீய பிற.***

(இ-ள்) சினம் செல்லா இடத்து தீது - தவஞ் செய்வானுடைய வெகுளி பலியாத விடத்துச் செல்லின்

அவனுக்கே தீதாம்; செல்லிடத்தும் அதனில் தீய பிற இல்-மற்றைப் பலிக்கு மிடத்துச் செய்யினும் அதனிற் றீயன பிற இல்லை, ஆகலான் மறத்தல் வெகுளியை எ-று.

செல்லாத வென்னும் பெயரெச்சம் கடைக்குறைந்து செல்லாவென நின்றது. செல்லிடம் வினைத்தொகை. செல்லா விடத்துச் சினந்தீதென்பது செல்லாவிடம் சினந் தீதாலையுடைய நில மென்றும், செல்லிடத்து மில்லதனிற் றீய பிற வென்பது செல்லிடமும் சினத்திற் றீய பிற இல்லாதலையுடைய நில மென்றும் பொருள் படுத லறிக. ஈண்டு செல்லாவிடம் செல்லிடம் என்னும் எழுவாய்கள் முறையே சினந்தீதாதற் கேதுவாகிய நிலம் சினத்திற்றீயன பிற இல்லையாதற் கேதுவாகிய நிலம் என்னும் பயனிலை களைக் கொண்டன வெனினும், அவ்விரு பயனிலைகளும் ஞேயங் காட்சிப்படாமைக் கேதுவாகிய நிலம் என்னும் ஒரு பொருள் குறித்து நின்றமையான், அவை வினையாகு மென்பது பற்றி, உம்மை இறந்தது தழீஇய வெச்சப் பொருள தென்க. ஐந்தனுருபு உறழ் பொருவுப் பொருட்டு. உவமப் பொருவுப் பொருட்டெனினுமாம். இல்லதனிற் றீய பிற என்னுஞ் சொற்றொடரில் இல்லென்னும் பயனிலைக் குப் பிற வென்பதை எழுவாயாகக் கொள்ளின் தீய வென் பதைக் குறிப்பு வினைமுற்றுப் பெயரெச்சமாகக் கொண்டு அத் தொடருக்கு 'அதனிற் றீயனவாகிய பிற குற்றங்க ளில்லை' என்னும் பொருளுரைக்க; அல்லதூஉம் தீய வென்பதைக் குறிப்பு வினையெச்ச முற்றெனக் கொண்டு 'அதனிற் றீயவாய்ப் பிற குற்றங்க ளில்லை' என்றுரைப்பினு மமையு மென்க. அவ்வா றன்றித் 'தீய' என்பதை எழுவா யாகக் கொள்ளின் அதனை வினையாலணையும் பெயரென்றும் பிற வென்பதைப் பயனிலை விசேடண மென்றுங் கொண்டு அத் தொடருக்கு 'அதனிற் றீயனவாகிய குற்றங்கள் பிற வாயில்லை' என்று பொருள் காண்க. ஈண்டு வெகுளி பலியாத விடமென்றது மனவலியான் மேம்பட்டாராகிய சீவன் முத்தரை யென்றும், பலிக்கு மிடமென்றது மனவலி குறைந்தாராகிய ஏனையோரை யென்றுங் கொள்க.

'முன், மனவலி குறைந்தார் செய்யு மின்னாதன பற்றி என்மாட்டெழும் வெகுளியை யொழியச் சொன்னீர். பின், யானே எனக்குச் செய்யும் இன்னாதன பற்றி என்

மாட்டுத் தோன்றும் வெகுளியையுந் தவிர்க்கச் சொன்னீர். இவ்விரண்டையும் மேற் கொண்டேன். ஆயினும் என்னுள்ளத்தில் ஓர் ஐயம் எழுகின்றது: என்னின் மனவலியான் மேம்பட்டாராவார் எனக்கு இன்னாதன செய்தாராயின் எனக்கு வெகுளி எழின், அஃது பாவமாகுமா? ஆகுமெனின், இப்பாவத்திற்கும் மனவலி குறைந்தாராவார் எனக்குச் செய்யு மின்னாதனபற்றி எனக்குத் தோன்றும் வெகுளி காரணமாக வரும் பாவத்திற்கும் எத்துணை வேற்றுமை என்றாற்கு இக் குறளால் விடை கூறுகின்றார்.

தவஞ் செய்வானாவான் மனவலியான் மேம்பட்டாராகிய சீவன் முத்தர் மீது வெகுண்டு அவர்க்குக் கேடு சூழ்ந்து நின்றானாயின், அவனுடைய வெகுளி அவர்க்கு ஒரு தீங்கும் பயவாவென்பது பற்றி அவனுக்கு ஒருவகைப் பாவம் வாராதாயினும், அவனுக்கு மனவலிவைச் செய்தலால் வரும் வேறொருவகைப் பாவத்தைக் கொடுக்குமாகலான், அன்னாரை ஞேயங் காட்டிப்படாமைக் கேதுவாகிய நில மென்பார் ‘செல்லாவிடத்துச் சினந்தீது’ என்றாரென்க.

இனித் தவஞ் செய்வானாவான் தன் தவத்தின்கண் உறைத்து நின்றானாயின் மனவலி மிக்கானாவன். அவன் மனவலி குறைந்தார் மேல் வெகுண்டு அவர்க்குக் கேடு சூழ்ந்து நின்றானாயின், அவன் மன அசைவு அவர்க்கு மனவலி குன்றலையும், பொருட் கேடு முதலியன விளைத்து அதனான் வரும் மனமாசையுஞ் செய்து இவற்றானாய இரு வகைப் பாவங்களும், இன்னும் அவனுக்கு வெகுளியான் வரும் மனவலி குன்றலும், கேடு சூழ்வதாலாய மனமாசுஞ் செய்து இவற்றானாய இருவகைப் பாவங்களும், ஆக நால் வகைப் பாவங்களையும் அவனுக்குக் கொடுக்கும். அவ்வாறன்றி அவர் மீது பிற குற்றங்கள் செய்தானாயின், அவன் அவர்க்குச் செய்த தீங்கு பற்றிய ஒருவகைப் பாவமும், தன் மனத்தைக் குற்றத்தொடு பொருத்தியமை பற்றி வரும் ஒருவகைப் பாவமும் ஆக இருவகைப் பாவங்களுக்கே ஆளாவன். ஆயின் செல்லிடத்துச் செய்யுங் குற்றங்களுள் தவஞ் செய்வானுக்கு நால்வகைப் பாவத்தை விளைக்கும் வெகுளியின் இருவகைப் பாவத்தையே தரும் பிற குற்றங்கள் தீயனவாகா வாகலான், அச் செல்லிடமும்

ஞேயங் காட்சிப்படாமைக் கேதுவாகிய சில மென்பார் 'செல்லிடத்து மில்லதனிற் றீய பிற' என்ருரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'ஒருவன் வெகுளி தன்னின் வலியார் மேலெழின் தனக்கே தீதாம், மற்றை யெளியார் மேலெழினும் அதனிற் றீயன பிற இல்லை' என்னும் உரையையும் 'செல்லா விடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே, ஏனையது இம்மைக் கட் பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலின் அதனிற் றீயன பிறவில்லை யென்ருர். ஓரிடத்தும் ஆகா தென்பதாம்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

'செல்லிடத்துக் காப்பான்........' என்னுங் குறளுக்கு உரை விளக்கங் கூறுதற்கண் 'வலியார் மேற் காவா வழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையின்' என்று தந்தமையான், இத் தீங்கு பயவா வெகுளி பற்றி அவரான் வருமேதம் யாது மில்லை யாகு மென்பதே கொள்ளக் கிடந்த போதிலும் 'செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வரும் ஏதமே' என்று கூறினமையானும், இன்னும் வெகுளியே யன்றிக் கூடா வொழுக்கம் கள்ளுதல் முதலியனவும் இம்மைக்கட் பழியும் மறுமைக்கட் பாவமும் பயக்குமென்பது பற்றி 'செல்லி டத்து மில்லதனிற் றீய பிற' என்பதை இவ்வேதுக்க ளானே சாதித்தல் ஏலாமை கிடப்ப அதனையும் நோக்காது சாதிக்கப் புகுந்தமையானும், அழகியார் உரை வழி இன் ரென்க.

இப்பாட்டு என்னுதலிற்ருேவெனின் தவஞ் செய்வா னுக்குச் சிவன்முத்தர் அவரல்லாத பிறர் என்னும் இரு வகையினர் மேலும் எழும் வெகுளியானது ஞேயங் காட் சிப்படுதற்குத் தடையாகு மாகலான், அன்னுன் வெகுளிக் காரணங்களை மறந்து வெகுளா தொழிக. (எ-று)

(5) *தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்*
*றன்னையே கொல்லுஞ் சினம்.*

(இ-ள்) தன்னைத்தான் காக்கின் சினம் காக்க—தவஞ் செய்வானுவான் தன்னைத் தன் ஞானுசிரியன் காத்த

லொழிந்து தான் காக்க நினைவானாயின் பிறப்பினைத்தரும் வெகுளியாவது தன் மனத்தின்கண் எழாவகைக் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும்—காவானாயின் அவ்வெகுளியானது வெகுளப்பட்டாரையன்றித் தன்னையே பிறப்பின்கண் உய்க்கும், ஆகலான் அன்னான் மறத்தல் வெகுளியை.

தான்காக்கின் என்றமையால் தன்ஞானாசிரியன் காத்தலொழிந்து என்பதும், தன்னையே கொல்லுஞ்சினம் எனப் பிரிநிலை யேகாரம் கொடுத்தோதினமையால் வெகுளப்பட்டாரை யன்றி என்பதும் வருவித்துரைக்கப்பட்டன. காவாக்கால் என்பது காலீற்று வினையெச்சம். ஏகாரம் தேற்றமெனினுமாம். கொல்லும் என்பது பிறப்பின்கண் உய்க்கும் என்னும் பொருளில் நின்றது.

'இத்துணையுங் கூறிப் போந்ததனால் யானும் பிறரும் எனக்குச் செய்யு மின்னாதனபற்றி என் மாட்டெழும் வெகுளியானது பாவம் பயக்கும் மென்றீர். அஃதொக்கும் அப்பாவந்தான் எனக்கு என்செய்யும்' என்றாற்கு, 'அஃது நின்னைப் பிறப்பின்கண் உய்க்கும்' என்று இக்குறளால் விடை கூறுகின்றார்.

ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களானும் அநாதியாயே பிணிப்புண்டு கிடக்கும் ஒருவனுக்கு முன்னைப் பிறப்புக்களிற் செய்துகொண்ட தவத்தின் விளைவாக இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாய வழி, அவன் மாட்டுச் சிவசத்தியின் வீழ்ச்சியாகிய சத்திநிபாதம் நிகழ்ந்து ஞானாசிரியனைத் தலைப்படச் செய்யும். அவ்வாசிரியன் தன் மாணாக்கனுடைய பக்குவா பக்குவங்களுக்கேற்பச் சோபானமுறையாய் அவனுக்குத் தவஞ்செய்யும் உபாயத்தை நல்கியும், அது கடைபோதற்கு வேண்டிய துணைச்சாதனங்களை உபதேசித்தும், ஞான நூல்களைக் கற்பித்தும், தன் அனுபவங்களைக் காட்டியும் உண்மையுணர்த்திப் பிறவித்துன்பங்கள் அவன் மனத்தினை நலியாவகை அவனைத் தன் கருணைச் செறிவினுட் படுத்திக் கண்ணிமை போலக்காத்து நிற்பன். இந்நிலையில் அம்மாணாக்கனது மனமானது தன் ஆரியனது தூய மன விரிவுட்பட்டு நிற்றல் பற்றி, அதன்கண்

வெகுளியாதல், இவ்வெகுளியின் வழித் தோன்றுங் கூடா வொழுக்கம், கள்ளல், பொய்ம்மையென்னும் இன்னச் சிந்தையாதல், கொலையாதல் விளங்கித் தோன்ற. தன் மாட்டுத் தங்குதலான் பரதந்திரனுதல்பற்றி அவனைச் சுவ தந்திரனுக்கும் பொருட்டு அவனது ஆசிரியன் அவனைப் புறக்கணித்தான் போன்று சேய்மைக்கண் நிறுத்தினும் நிறுத்துவன். அல்லதூஉம் வேறோர் நோக்குடையான் போல அவனைத் தன்னணிமையினின்றும் பிரித்து நிற்பன். அங்ஙனம் பிரிந்து நின்ற மாணுக்கனுக்குச் சிலர் செய்த இன்னுதனபற்றிப் பிராரத்த நுகர்ச்சிக்கட் சென்ற தற் போத முனைப்புக் காரணமாகப் பழைய வாதனையான் வெகுளி தோன்றி அவன் மனத்தினைப் பலகாலும் நலியச் செய்து அடுத்த பிறப்பிற்கு வித்தாய் நிற்கும். பிறப்பின் கண் உய்க்கும் இந்நலிவுகள் தன் மனத்துப் படாவகைத் தன்னைத் தானே காக்க நினைவானுயின், தவஞ் செய்வா னுவான் தன்மனத்தின்கண் சினமானது எழாவகைத் தடுப்பானுகவென்பார் 'தன்னைத்தான் காக்கிற் சினங் காக்க' என்ருரென்க.

அன்றிச் சினமானது தன்மனத்தின்கண் தோன்று வகை தடாதொழிந்தானுயின், அஃது கூடாவொழுக்கம், கள்ளுதல், பொய்ம்மை முதலிய இன்னுச் சிந்தைகளையும், கொலை நோக்கையும் உளவாக்கி நின்று தவத்தினைக் கொன்று ஒருதலையாகத் துன்பத்தினைத் தரும் பிறப் பிறப் புக்களில் தன்னை உய்க்கு மொழிய வெகுளப் பட்டானை அவ்வாறு செய்யாதாகலான், அத்தகைப்பிறப்பிறப்புக்கள் வேண்டாவாயின் தவஞ் செய்வானுவான் தன் மனத்தின் கண் சினம் எழாவகைக் காப்பானுகவென்று கூறுவாராய் 'காவாக்காற் றன்னையே கொல்லுஞ் சினம்' என்று ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'தன்னைத் தான் துன்ப மெய்தாமற் காக்க நினைத்தானுயின், தன் மனத்துச் சினம் வாராமற் காக்க; காவானுயின், அச்சினந் தன்னையே கெடுக்குங் கடுந் துன்பங்களை யெய்துவிக்கும்' என்னும் உரையையும் 'வேண்டிய வேண்டியாங் கெய்தற் பயத்த தாகிய தவத்தைப் பிறர்மேற் சாபம் விடுத்தற்காக இழந்து அத்தவத் துன்பத்தோடு பழைய பிறவித் துன்பமும் ஒருங் கெய்துதலின், தன்னையே கொல்லுமென்ருர். கொல்லச்

# ஆங்காங்கே.

கோ. தியாகராசன், G. M. V. C. தஞ்சை.

1. இலக்கணம் :—

தமிழ் எழுத்தொலிகளில் (1) ணகர, நகர, னகரங்களும், (2) ரகர, றகரங்களும் (3) லகர ளகரங்களும் உள்ளன.

இவற்றுள், ணகர, நகர, னகரங்களை வேறு படுத்திக் காட்ட முறையே டண்ணகரம், தந்நகரம், றன்னகரம் எனக் கூறுகின்றோம். அதாவது டகரத்தை அடுத்துவரும் ணகரம், தகரத்தை அடுத்துவரும் நகரம் றகரத்தை அடுத்து வரும் னகரம் என்று பொருள்பட தமிழ் இலக்கணப் பண்பைக் காட்டும் பெயர்களால் இவ்வெழுத்துக்களை குறிக்கிறோம். இது போலவே றகரத்தை வல்லின றகரம்.

---

சுரப்பதாங் கீழ் என்புழிப் போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

அச்சினம் தன்னையே கெடுக்குங் கடுந் துன்பங்களையெய்துவிக்கும் என்புழி எய்துவிக்கும் என்றது துணையானே, அத்தவத் துன்பமென்றது அச்சினத்தின் முன்னர்த் தவஞ் செய்யுழித் தோன்றிய துன்பமன்றி, அச்சினத்தின்வழித் தவமிழந்தமை பற்றிவருந் துன்பமாகும். இத்துன்பந் தானும் பின்னருந் தன்னைத் தவத்தின்கண் உய்த்துச் சிவானுபூதிக்கு ஏதுவாகினு மாகுமென்பதனால் அது தன்னைக் கெடுக்காதுவிடினும் விடுமென்பது கொள்ளக் கிடக்கவும், இதனை நோக்காது தவமிழந்தமை பற்றி வரும் இத்துன்பத்தையுந் தன்னைக் கெடுக்குந் துன்பத்தினுள் ஒன்றாக வைத்து உரை கூறியமை அழகியாரது நுண்மாண் புலமைக்கு இழுக்காதலறிக.

இப்பாட்டு என்னுதலிற்றோவெனின்! துன்பத்தினைத் தரும் பிறப்பிறப்புக்கள் வேண்டாவாயின், தவஞ் செய்வானாவான் வெகுளிக் காரணங்களை மறந்து வெகுளா தொழிவானாக. எ-து. (தொடரும்.)

ரகரத்தை இடையின ரகரம் என இலக்கணப் பண்பை ஓட்டி இவ்வெழுத்துக்களைக் குறிக்கிறோம். ஆனால் லக ரத்தைக் குண்டு லகரம் எனவும், ளகரத்தைக் குண்டில்லா ளகரம் எனவும் இலக்கணப் பண்பற்ற பெயர்களால் குறிக்கிறோம். ஆகையால் இவ் வழக்கத்தை விடுத்து, லகரத்தை 'றல்லகரம்' எனவும் (லகரம் றகரமாக மாறும் இலக்கணப் பண்பை யொட்டியும்) ளகரத்தை 'டள்ள கரம்' எனவும் (ளகரம் டகரமாக மாறும் இலக்கணப் பண்பை யொட்டியும்) இவ்வெழுத்துக்களைக் குறிப்பது சிறப்பல்லவா ?

2. 'வாக்கு' என்னும் சொல் தமிழ்ச்சொல்லா! பிற மொழிச்சொல்லா!

(அ) முகத்தில் முன் நீண்டுள்ள உறுப்பிற்கு 'மூக்கு' என்பது பெயர். 'மூ' என்னும் எழுத்திற்கு 'முன்' அல்லது 'நீட்சி' என்னும் பொருளுள்ளது (எ. கா) மூதாதை= முன் இருந்த தாதை, மூத்தாள்=வயதில் முன் உள்ளவள், மூதேவி=முன்பிறந்த தேவி, மூப்பு=வயதின் நீட்சி. எனவே, முகத்தில் நீண்டுள்ள உறுப்பை 'மூக்கு' என்றான் பண்டைத்தமிழன்.

(ஆ) வாயின் நடுவிலுள்ள உறுப்பை "நாக்கு" என்றான், 'நா' என்னும் எழுத்திற்கு 'நடு' என்னும் பொருளுள்ளது. எனவே, அறிவிற்கேற்றவாறு இவ் வுறுப்பிற்குப் பெயரிட்டான் பழந்தமிழன்.

(இ) 'பல்' என்னும் சொல் 'மிக்க' எண்ணிக்கை யுள்ளவை என்னும் பொருள் கொண்டது. ஆகையால், வாயினுள் பலவான உறுப்பிற்கு 'பல்' என்றான் ஆன்றோன். மேலும், வாயில் போட்ட ஒன்றைப்பலவாகச் செய் வதும் பற்கள்.

(ஈ) 'அண்' என்னும் பகுதிக்கு 'மேல்' என்னும் பொருள் உள்ளது. எனவே வாயின் மேல் பகுதியை 'அண்ணம்' என்றான் மேலோன். (எ. கா) அண்ணன்= மேலோன், அண்ணல்=மக்களில் மேலோனாகிய அரசன், அண்ணாவி=அறிவில் மேலோனாகிய ஆசிரியன்.

(உ) காதின் செயலை (Function) 'கேட்குதல்' என்றான்

(ஊ) கண்களுக்கு மூன்று முதற்செயல்கள் (Primary Functions) உள்ளன.

(1) காண்டல், (ஆங்கிலத்தில் இச்செயலுக்கு ஏற்ற சொல் 'See',) 'காண்' என்பதிலிருந்து 'காட்சி' என்பது வந்ததுபோல 'See' என்பதிலிருந்து 'Sight' வந்தது,

பின் வரும் மேற்கோள்களில் இப்பொருளை உணர்க.

"கண்டொன்று சொல்லேல்"

"காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும்
கண்ணே"

(2) 'பார்' இச்சொல்லின் பொருளை நன்கு விளக்கும் ஆங்கிலச்சொல் 'look' பிறவற்றை தான் நன்கு விளங்கிக்கொள்வதற்காக கண்களியற்றும் செயல் 'பார்த்தல்'

(எ. கா) "பொன்னென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்ப ரொள்ளியவர்"

"விளக்கற்றம் பார்க்குமிருளே போற்கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு"

(3) தன் கருத்தை கண்களால் பிறருக்குத் தெரிவிப்ப தற்கான செயல் 'நோக்கு' (Significant look.)

(எ. கா.) "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள்
என்ன பயனு மில"

மேலே காட்டியவாறு, முகத்திலுள்ள உறுப்புகளுக்கும், அவற்றின் செயல்களுக்கும் ஒப்பற்ற அறிவொடு சொற்களமைத்த பண்டைத்தமிழன், வாயினுல் பிறருக்கு தன் கருத்தை வெளிப்படுத்த வரும் சொற்களை 'வாக்கு' என்றதும் விந்தையோ? கல்வியறிவில்லாத தமிழ் மக்கள் "பாக்குராப்பலே பாக்குருன் பாக்கு வெற்றிலே கேக்குருன்" என்கிருர்கள்.

மேலும், "கைவாக்கு" என்கிறோம் (கைவாக்கு= Natural trend of the hand) 'செல்வாக்கு' என்கிறோம். (செல்வாக்கு=Natural trend of wealth ie influence) இதுவே

தமிழின் போக்கு, போ-போக்கு (Natural trend of progress.) எனவே வாயின் இயற்கைப் போக்கு 'வாக்கு'. எனவே, இத்தகைய தமிழ்ச்சொல்லைப் பிறமொழிச்சொல்லென்பது ஏற்குமா!

தமிழ்ச்சொற்களிருக்க அவைகளை விடுத்து பிறமொழி பெருமொழி யென்னும் பேதமையால் பீடிக்கப்பட்டு உழலும் தமிழர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு,

## முறை.

'Just' என்னும் ஆங்கிலச் சொல்லிற்குப் பல பொருள்களுண்டு. அவையாவன:— Reguler, even, true, impartial, fair, proper, exact, pormal, orderly, conforming with law and righteons (synonyms) என்பன.

இதுபோலவே 'முறை' என்னும் தமிழ்ச்சொல்லிற்குப் பலபொருள்கள் உண்டு. அவை பின்வரும் குறட்பாக்களில் நன்கு விளங்கும்.

(1) "உறன் முறையான் உட்பகை தோன்றின்
இறன் முறையா
னேதம் பலவும் தரும்" (தி. கு. 885)

இதிலுள்ள 'முறை' என்னும் இரண்டும் 'order' அல்லது 'வரிசை' என்னும் பொருள் உள்ளது.

(2) "செய்வினை" செய்வான் செயன் முறை அவ்வினை உள்ளறிவான் உள்ளம் கொளல் (தி. கு. 677)

இதில் 'செயன் முறை' proper method of doing என்னும் பொருள்கொண்டது.

(3) "முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வார்
திறப்பாடிலாஅ தவர்" (தி. கு. 640)

இதில் 'முறைப்படச் சூழ்ந்து' என்பதில் 'சரியான வழியில் ஆராய்ந்து' (Regular investigation) என்னும் பொருள் விளங்கும்.

(4) "இன்மையின் இன்னாது உடைமை முறை செய்யா மன்னவன் கோற் கீழ்படின்" (தி. கு. 558)

இதில் 'உடைமை முறை' என்பது (Property rights or civil Justice) 'சொத்துரிமை' என்னும் பொருள் கொண்டது.

(5) "நாடொறு நாடி முறை செய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்" (தி. கு. 658)

இதில் 'முறை' என்பதற்கு' (Maintenance of order) 'ஒழுக்க அமைப்பு என்பது ஏற்ற பொருள்.

(6) எண்பதத்தான் ஓராமுறை செய்யா மன்னவன்
தண்பதத்தாற் றானே கெடும்" (தி. கு. 548)

(7) "ஓர்ந்து கண்ணோடாது, இறைபுரிந்து யார்
மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை" (தி. கு. 541)

(8) "முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (தி. கு. 388)

மேற்காட்டிய 6, 7, 8 எண்களுள்ள பாக்களில் வரும் 'முறை' என்னும் சொல்லிற்கு 'Justice' (அறவழித் தீர்ப்பு) என்று பொருள்படும்.

மேலும்,

(9) "இது தகுமோ! இது முறையோ! இது தருமந் தானோ" என்று இராமலிங்க சுவாமிகள் ஓலமிட்டதற்குப் பொருத்தமான பொருள் "Is this equity! Is this Justice! Is this righteous!"

இன்னும் வழக்கில்,

(1) நீர் தட்டுப்பட்ட காலத்தில், முறைவைத்து நீர் பாய்ச்சல். இதில் 'முறை' என்பது வரிசை, இவ்வாறு வரிசை அமைத்துவிட்டால், அந்த முறை உடையவன் உரிமை உடையவனாகிறான்.

(2) உறவின் முறையின் பெயர்களால் தலைமுறை வரிசை விளங்கும். (எ. கா) முப்பாட்டன், பூட்டன், பாட்டன், அப்பன், தான், மகன், பெயரன், எள்ளுப் பெயரன், கொள் பெயரன் என்பதாக 9 தலைமுறைகளின் வரிசை விளங்கும். இன்னும் உடன்பிறந்தாரில், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை முதலிய முறைப்பெயர்களால் பிறந்த வரிசை நன்கு விளங்கும்.

மற்றும், அத்தை, மாமா, அத்தான், அத்தாச்சி, மச்சான், மச்சி முதலிய முறைப் பெயர்களால் திருமணம் நிகழத்தக்க ஒழுங்கு உறவும் விளங்கும்.

(3) ‘குய்யோ முறையோ’ என்று சொன்னான் என்கிறோம், இதில் ‘குய்யோ’ அயலாரைக் கூவும் கூக்குரல். ‘முறையோ’ என்பது இது நீதியா (Is this Justies) என்னும் பொருள் கொண்டது.

(4) ‘கேள்விமுறையில்லையா’ என்கிறோம். இதில் ‘Is there no enquiery and Justies’ என்னும் பொருள் உள்ளது.

(5) ‘அவன் என்னிடம் முறையிட்டான்’ என்கிறோம். தற்காலத்திலும் முறை மன்றத்தில் தன்குறையைக்கூறுபவர் முறையையும் கூறுவது வழக்கு. எடுத்துக்காட்டாக:— வல்லான் என்னிடத்திலிருந்து 100 ரூ, கைமாற்று வாங்கினான். நான் பல தடவைக் கேட்டும் கொடுக்க மறுக்கிறான். ஆகையால் எனக்கு அந்த ரூ. 100 யும் கொடுக்கும்படியாய் கட்டளை இடவேண்டும் என்று விண்ணப்பம் செய்கிறான். இந்த விண்ணப்பத்தில் முறை இன்னதென்று குறிப்பிட்டிருக்கிறது. இக்கருத்தே ‘முறையிட்டான்’ என்னும் சொற்றொடரில் உள்ளது. எனவே, இப்பொருளை நாம் ஏற்று பின்வரும் ஆங்கிலச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களமைத்து வழக்கத்தில் கொண்டுவருவது சிறப்பாகும்.

1. Justice = முறை
2. Court of justice = முறை மன்றம்
3. Judge = முறைவலன் (‘பாவலன்’ என்பதுபோல)
4. Judge of the High Court = உயர்மன்ற முறைவலன்
5. Judge of the Sub Court = கீழ்மன்ற முறைவலன்
6. Asst. Judge = துணை முறைவலன்.

தமிழ் வாழ்க.

# பொருந்துமா? (கூ)

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே.

இலக்கணக் கொத்து ஆசிரியர் மாணிக்கவாசகர் அறிவாம் சிவனே என்பது திண்ணம்' எனக் கூறினர். மாணிக்க வாசகரால் அருளிச் செய்யப்பட்டது திருவாசகம். திருவாசகம் என்னுந் தொடருக்குத் திராவிடப் பிரகாசிகையில் சபாபதி நாவலர் பின்வருமாறு பொருள் குறித்துள்ளனர்.

திருவாசகம் என்பது திருமயமான வாசகம் எனப் பொருள்படும். ஈண்டுத் திரு. அருட்டிரு. எனவே அருள் நாத வடிவான வாசகம் என்றவாறாயிற்று. திருவாசகம் என்பது அழகிய வாசகத்தையுடையது என அன்மொழித் தொகையாய் வாதவூரடிகள் அருளிச் செய்த தமிழ் வேதத்திற்குக் காரணக் குறியாயிற்று. இனித் திருவாசகம் பின் மொழி ஆகுபெயர் என்றுரைப்பாருமுளர். உற்று நோக்குவார்க்கு அஃது அன்மொழி தொகையே யாம்.—அவ்வாறு தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட் காண்க என்பதாம்.

இயற்றிய நூலிலே ஆசிரியரின் வரலாறு இடை இடையே கலந்து மிளிரும் என்பது மிகையாகாது. திருவாசகத்தின் கண்ணே மாணிக்கவாசகரை ஆட்கொண்ட முறை, நரி பரியாக்கிய அருட்டிறம், முதலியவற்றைக் குறிப்பிடுதல் போலவே தில்லையில் புத்தரை வாதில் வெல்லும் பொழுது அமணகுரு 20 கேள்விகள் கேட்டமையும் அரசன் பெண்ணாகிய ஊமைப்பெண் விடையிறுத்தவற்றையும் உலகம் அறியத் திருச்சாழல் என்னும் பிரிவில் 20 மணிகளாக மிளிர வைத்துள்ளார். இத் திருச்சாழல் புத்த மதத்தினரின் கேள்விகளை மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைக் கேட்கவே ஊமைப்பெண் திருவருள் காரணமாக விடையிறுத்தனவற்றையே அருளிச் செய்துள்ளார் வாதவூரடிகள்.

ஆகவே வாதவூரடிகள் ஊமைப் பெண் இருவரின் வினாவிடையே திருச்சாழல் என்பதும் ஒன்று. பின்னும் ஈழ நாட்டரசன், சோழ நாட்டரசன் அவையிலுள்ள அறிஞர்,

புத்தகுரு, ஆகிய இவர்கள் கூடிய கூட்டத்தின் வரலாறு எனினுமமையும்.

இனிமேல் கூறிய 20 மணிகளுள்.

4-வது

'அயனை அநங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.'

என்ற இப்பாட்டின்கண் தாழ்குழலாய் என்று மாணிக்க வாசகரை விளித்துள்ளது மாணிக்கவாசகருருவ நிலைக்குப் பொருந்துமாறு எங்ஙனம்? முற்காலத்தில் நூல்கள் பனை யேட்டில் எழுதப்பெற்று வழங்கி நிலை நின்று பின் அச்சேறி யுள்ளன என்பதை யறியாதார் உளரோ? பனை ஏட்டின்கண் தாழ்குழையாய் என்ற தொடர் தாழ்குழயாய் என வந்து (ஐகாரம் அகரமாகி) குழயாய் என்பதில் யா (லா) என எழுது வோரால் கருத்தறியாமல் எழுதப் பட்டிருக்க வேண்டும் என ஊகிக்க இடந்தருகின்றது. குழையாய்—குண்டலங்களை யணிந்தவரே (மாணிக்க வாசகரே) என விளிப்பது எவ்வளவு பொருட் பொருத்தமும் சிறப்பும் பொருந்தி யுள்ளது. இவ் வாறு மாற இடமுண்டு என்பதனை ஏட்டெழுத்துப் பயின்ற அறிஞர் தெள்ளிதின் உணரக் கூடியதொன்றே. ஞான முடைய பெரியோர் குண்டலமணிவது சைவசமயக் கொள்கை களில் சிறப்புற்று விளங்குவதை இன்றுங் காட்சியளவில் கண்டு தெளியக் கூடியதே யாம்.

இனி இவ்வாறு கொள்ளாமல் குழல்—குண்டலம் (உட் டுளைப் பொருள்) எனப் பொருள் அக்காலத்தில் வழங்கி வந் திருக்கும் எனினும் அமையும்.

திருச்சாழல் 9-வது மணி.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

பேதாய்—பெண்ணே, என்றே சிறப்பில் பொருளை விட்டு பேதாய்-உண்மத்தம் பிடித்தவராய் என்ற பொருள்கொண்டு, தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்திலனேல் இரு நிலத் தோர் பேதாய் விண்பால் யோகஞ்செய்து வீடுவர் என இயை யும். இவை பொருந்துமா சிந்திக்க.

## "உயிர்"

### மேல் புலத்து சாக்ரெடீசும் பிளாட்டோவும் கீழ்புலத்துத் தொல்காப்பியனும் வள்ளுவனும்.

(வேலூர்க் காரழன்)

இற்றைக் கையாயிரமாண்டுகளாக மாநிலத்திலரும்பிய மெய்யுணர்வாளர்களும் கலையியல் வல்லுனர்களும் நற்பொருளாளர்களும் அறிவியலாளர்களும் சிந்தனையாளர்களும் உயிரைப் பற்றித் தொடர்ந்து ஆராய்ந்த கருத்துக்களை அறிந்து, மேல்புலத்து கிரீக்கர்களும் கீழ்புலத்துத் தமிழர்களும் கண்ட உண்மையைத் தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் முழு நோக்கமெனினும் வான்புகழ் வள்ளுவன் கண்ட உண்மைச் சமயக் கருத்துகளுக் கப்பாற்பட்டு ஏனையோரும் ஏற்கவல்ல பெற்றிமை யுடைத்தென்பது வெள்ளிடைமலை.

சிந்தனையாளர் சாக்ரெடீசும் பேரறிஞர் பிளாட்டோவும் மேல்புலத்தை அறிவியல் ஒளியால் ஒளிபெற வைத்ததைப் போன்று கீழ்புலத்தைத் தொல்காப்பியரும் வான்புகழ் வளளுவரும் அறிவியல் ஒளியால் ஒளிபெற வைத்தார்கள். காணும் பொருளைப்பற்றிய ஆராய்ச்சிகள் ஆய்வு மன்றங்களில் நிகழ்த்திக் கண்டு பிடிக்கும உண்மைகளுக்கு மறுப்பும் எதிர்ப்பும் திருத்தமும் ஏற்படாமலில்லை; காணும் சில பொருள்களைப் பற்றி ஆராயமுடியாது ஒதுங்கி ஓடும் நிலையை இன்று கண் கூடாகக் காண்கிறோமெனினும் கட்புலனுக் கெட்டாத அருவமான ஒன்றை உணர்வு நிலையிலும் கூறிய சிந்தனை ஆராய்ச்சியாலும் நன்கறிந்து விளக்கினும் விஞ்ஞானிகளால் ஏற்கவும் எதிர்க்கவும் முடியவில்லை என்பதை நன்கறிகிறோம். பன்னெடுங் காலத்திற்கு முன்னர் உணர்வுநிலை எய்திய பெருங் கவிகள் கூறிய சிலவுண்மைகளைப் பிற்காலத்து விஞ்ஞானிகள் அறிந்தார்களென்பதை மறுக்கமுடியாது. உயிரைப்பற்றிய ஆராய்ச்சி உயர்ந்த வண்ணமாய் இருப்பினும் முடிக்த முடிபுக்கெவர்வரினும் அதற்கு எதிர்ப்பும் மறுப்பும இல்லாமலில்லை.

காற்றே உயிரென்றும் – அறிவே உயிரென்றும் – ஐம்பூதங்களின் சேர்க்கையே உயிரென்றும் – இலங்கும் பொரு

ளினியக்கமே உயிரென்றும் கூறுகிற கொள்கையுடைய கூட்டங்கள் இவ்வுலகில் தொன்று தொட்டு நிலைத்துவளர்ந்து வருகின்றன. மேல் நாட்டைப் பொறுத்தவரையில் சாக்ரெடீஸ்–பிளாட்டோ இவர்களின் கொள்கைகள் அடிப்படையாக விருப்பினும் முன்னவரின் மணியொத்த பலசிந்தனையின் பொறிகளுக்குப் பின்னவரின் ஆராய்ச்சியும் விளக்கமும் உருவளித்தன. உயிர் உடலுக் கப்பாற்பட்டதென்றும் அது என்றும் நிலைத்ததென்றும் நீதி–பண்பு–அறம் இவைகளால் தூய்மையுறல் வேண்டுமென்றும் கூறி உயிர் இறவாத்தன்மையது என்ற கொள்கையை, "எதிர்மறை எதிர்மறையினின்றரும்புகிறது; ஆதலின் உயிர் மரணத்தினின்றரும்புகிறது; அங்ஙனமில்லை எனின் - மரணம் உயிரினின்றரும்பின், மரணத்தினின்று உயிர் அரும்பவில்லை எனின் அனைத்தும் கடைசியில் மரணமே," என்று நிறுவிய உண்மைக்கே உலகம சாக்ரெடீசுக்கு வணங்குகிறது. இவரியம்பியதைப் போன்று இவருக்கு முற்காலத்தும் பிற்காலத்தும் எவருமியம்பியதில்லையாதலால் சாக்ரடீஸ் உலகில் உச்சநிலையடைந்தார்.

உயிர் உடலைவிட்டு நீங்குவதைச் செலவுக்கொப்பிட்டு மேல்நிலை எய்துதற்குரிய நல்வழி என்று நவின்று மரணத்தைப் பயமாக்காமல் மகிழ்ச்சியாக்கிய உயர்சிறப்பு சாக்ரடீசுக்கே உண்டு. உயிர் உடலைவிட்டுச் சென்றபின்னர் விலங்காகவோ-பறவையாகவோ பிறக்கிறதென்றுரைத்தார்; பெற்ற பிறப்பைப் போன்றே பல பிறப்புக்கள் கட்டாயம் இருந்தனவென்று பெரிதும் வலியுறுத்தினார். சாக்ரெடீசுக்குப் பன்னெடுங் காலம் முன்னர் தோன்றி தொன்மைக்குத் தொன்மையாய் விளங்கிய ஹோமர் என்ற பெருங்கவி உடல் மரணமெய்தினும் உயிர் மரணமுறாமல் உடலுக் கப்பாற்பட்டு தனித்துள்ளது என்றுரைத்தார்.

கிறித்தவர்களுடைய கொள்கையைக் கூர்ந்தாராயும் பொழுது உயிர் உடலுக்கப்பாற்பட்டு மரணத்தையுங் கடந்து தனித்து இறவாத் தன்மையுட னிலங்குகிறதென்றறிகிறோம்.

சாக்ரெடீசின் நேர் மாணவராயிலங்கிய பேரறிஞர் பிளாட்டோ உடலின் நுண்பொருளைப்பற்றி ஆராய்ந்தாரெனினும் அறிவுக்கு உயிரென்றும்–மனதிற்கு உயிரென்றும்–உயிரையே வாழ்க்கை என்றும் கூறியதாக மொழிபெயர்ப்புகள் காணப்படினும் அவரின் பிற்கால நூல்களைப் பார்க்கையில் மயக்கமற்ற முறையில் உயிரைப் பற்றிச் சிறந்த

துறையில் கூறியவைகள் பாராட்டற் குரியன. உயிரைப் பற்றி ஹோமர் கூறியதற்கும் சாக்ரெடீசும் பிளாட்டோவும் கூறியதற்கும் பொருத்தம் நிரம்ப இருப்பினும் இதை எதிர்த்தவர்கள் எண்ணிலர் — ஏற்றுக்கொண்டவர்கள் எண்ணிலர். உடலுடன் பிணைந்ததே உயிரென்றும் உடலுடனே உயிர் மறைகிறதென்றும் கூறியவர்களுமுண்டு. பொதுவாக சாக்ரெடீசும் சிறப்பாக பிளாட்டோவும் உயிர் உடலிலிருந்து விடுதலைப்பெற்ற பின்னர்தான் உயர்நிலை எய்துகிறதென்று கருதினர். பிளாட்டோ சமயக் கொள்கையாலும் யூகத்தாலும் உயிர் இறவாத் தன்மையதென்று முதலில் கூறினாலும் பின்னர் அறிவியல் முறையாலும் அளவையியல் முறையாலும் உயிரின் இறவாத் தன்மையை உரைத்தார்.

கட்புலனுக் கெட்டிய பொருள்கள் அழிவுறுவதால் கட்புலனுக்கெட்டாத உயிர் அழிவுறுவதில்லை என்று சிறந்த ஆராய்ச்சி செய்து பாருக் கறிவித்தார் பிளாட்டோ. தனித்த பொருள் இயக்க முறுவது பிறிதொரு ஆற்றலாலென்றும் இயல்பாகவே பொருள் இயங்குதற்கு உயிர்தான் காரணமென்றும் அவ்வுயிர் இறவாது என்றும் அனுதியாய் இருக்க வேண்டுமென்றும் இனிதே அளவை முறையில் அறிவியல் முறையில் அறைந்த பிளாட்டோவின் அறிவுடைமையின் அருமை என்னே!

உயிர் என்பது மிக இன்றியமையாத அடிப்படையாகிய இயக்கம் என்றும் நிலைத்ததென்றும் உரப்பொருளென்றும் விளக்குவதுடன் உயிர் திண் பொருள்களின் மாற்றத்திற்குக் காரணமா யிருப்பினும் உயிர் மாற்ற மெய்தாமல், தன் இயல்பினின்று மாருமல், அருகாமல், பெருகாமல், தோற்றுவிக்கப்பட்ட பொருள்கள் போல் அல்லாமல், அழியும் பொருள்கள் போல் அல்லாமல், என்றும் அனுதியாக நிலைத்து, திண் பொருள்களை இயங்க வைக்கிறதென்ற பிளாட்டோவின் பெருமைக்கு ஈடு ஏது?

அண்டங்களின் பகுதியால் இவ்வுடல் தோன்றுவதைப் போன்று இவ்வவனியை இயக்குவிக்கும் உயிரிலிருந்தே உயிர்கள் வந்திருக்க வேண்டு மென்றும் இதை அடிப்படையாகக் கொண்டாராயப் புகின் பூதங்களால் தோன்றிய உடல் பூதங்களை அடைவதைப் போன்று, உயிர்கள், உலகை இயக்குவிக்கும் பெரிய உயிரை அடைகின்றன என்று பிற் காலத்தவர்கள் கருதுகின்றனர்.

ஆங்கில இலக்கிய உலகில் சிறந்த எழுத்தாளரென்றும் உயர்ந்த உலக நற் பொருளாளரென்றும் சீரிய சிந்தனையாளரென்றும் கருதப்படுகிற எமர்சன் என்ற பெரியார் உயிர் எங்கிருந்தெங் கேகுகிற தென்பதை அறிய முடியவில்லையென்றும் மனிதனை அருவியாக்கி அது தொடங்கு மிடமும் ஒடுங்கு மிடமும் அறிய முடியாது மறைக்கப்பட்டுள்ள தென்றும் உயிரானது, அமைதியான அறிவாகவும் உலக எழிலாகவும் இலங்கி உலகிடையுள்ள ஏனைய பொருள்களுடன் தொடர்பு கொண்டுள்ள தென்றும் கூறி, இவை யனைத்தையும் அடிப்படையாகக் கொண்டாராய்ந்து உயிர் ஒரு திண் பொருளாக இல்லாமல் உடலை இயக்குவிப்பதாய் விளங்கி ஒளியாக ஒளிர்கிற தென்றும், அறிவாகவும் விருப்பமாகவும் இல்லாமல் இவ்விரண்டிற்கும் தலைமையாகத் திகழ்ந்து அனைத்திற்கும் மூலமாகி அளவிறந்து மிகப் பெரியதாய்ப் பிறங்குகிற தென்றும் அவ் வொளி ஒளிர்கையில் எல்லாம் ஒளியாக ஒளிர்கிற தென்றும் பின்னர் அவ் வுயிர் அறிவுடன் பிணைகையில் தனி யறிவும்—பற்றுடன் பிணைகையில் பண்பும் நட்புடன் பிணைகையில் அன்பும் மலர்கிற தென்றும் விளம்பியதின் அருமை என்னே!

உயிர் அறிவின் பெருக்கத்தால் நல்ல பண்பெய்தி மாற்றமுடைய மேல்நிலை எய்துகிறதென்றும் (முட்டை புழுவாகி; புழு பட்டுப் பூச்சியாக மாறுதல்) உயிரானது அனைத்தையும் கூர்ந்தாராய்ந்து உண்மையை விளக்கும் பெற்றிமையுடைய தென்பதுடன் உண்மையை உரைக்கும் நிலைதான் இயற்கையின் உச்சநிலை என்றும் உலகில் உயர்ந்த அனைத்திற்கும் உயர்ந்தது உயிர் என்றும் அது தூய்மையாலும்-நீதியாலும்-அறத்தாலும் மாண்புற்று பின்னர் பண்பில் இரண்டறக் கலந்து இன்புற்றுக் கடைசியில் கடவுளிடத்து மிக நெருக்கமாய் வாழ்கிறதென்றார் எமர்சன்.

இயற்கையை முன்னிறுத்தி இயற்கையில் தோய்ந்து இயற்கையில் இறைவனை உணர்ந்த ஆங்கில நல்லிசைப் புலவன் ஓர்ட்ஸ் ஓர்த் உயிர் இறவாத் தன்மைய தென்றும் அது ஆண்டவனிடத்திருந்து விண்மீன்களைப்போல் வந்து சென்று கொண்டிருக்கிறதென்றும், அவ்வுயிர் குழந்தைப் பருவத்தில் மிகவும் தெய்வீகமாக இருந்து நாள் ஏற ஏற உலகில் உழல உழல தெய்வீகத்தை அறவே இழந்து, உலகாயுதத்தால் சிக்குண்டு சிதைவதால் உண்மையையும் அழகையும் அடிப்படை

யாகக்கொண்டு அன்புப் பிழம்புகளுடன் வாழ்ந்தால் மெய்யுணர்ச்சி குழந்தைகளுக்கே தெரியுமென்றும் கூறி, தான் உணர்வு நிலையில் திளைப்பதின் அருமையை அறையுங்கால் காணும் உலகை உயிர் மறந்து அனைத்தையும் இயக்குவிக்கும் இறைவனை ஒன்றுகையில் ஒளிரும் பேரொளியைப் பகரவும் இயலவில்லை என்று கூறுகிறார்.

இற்றைக் கையாயிரமாண்டுகட்கு முன்னர் தமிழகத்தில் கலையியலொளி ஏந்திய ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியன் வையக அமைப்பை எழுத்தியலில் புகுத்தி உயர்ந்த விளக்கத்துடன் விளக்குகிறார். உயிரெழுத்தென்றும் மெய் எழுத்தென்றும் பிரித்து இயக்கத்திற்கு உயிர்தான் காரணமென்றும் உயிரில்லை எனில் இயக்கமில்லை என்றும் மெய்யின் வழிதான் உயிர் தோன்றுமென்றும், மெய்யுடன் உயிர் சேர்ந்தாலும் உயிரின் இயல்பு மாறுவதில்லை என்றும் கூறியுள்ளார். உயிர் மெய்யின் வழிதான் தோன்று மென்றமையால் மெய்யிக்குள்ள உருவம் உயிருக்கில்லை என்பதும் மெய்யில் உயிர் புகுந்தாலும் உயிரின் இயல்பு மாறுவதில்லை என்பதால் மெய்யிக்கு அப்பாற்பட்டது உயிரென்பதும் நன்கு விளங்காமலில்லை. உயிர் அறிவின் முதிர்வால் அறுவகையாக்கப்பட்டு–ஓரறிவு முதல் ஆறு அறிவாகப் பிரிக்கப்பட்டு–மனிதனிடத்திருப்பது ஆறு அறிவு என்றும் உயிருக்கும் இறைவனுக்குமுள்ள வேறுபாட்டைக் கூறுகையில் இயல்பாகவே வினையில் பற்றப்படாது அறிவாய் விளங்கும் ஒன்றே இறைவனென்றும் இயல்பாகவே வினையை யுடையது உயிர்களென்று உணர வைத்து உயிர் அருளொடு புணர்ந்து பிறவாத்தன்மை எய்தலே வாழ்வினிறுதி என்ற தொல்காப்பியனின் பெருமை என்னே!

தொல்காப்பியனின் அடிப்படையை முன்னிறுத்தி, தமிழ் நாகரிகத்தைக் கருவூலமாகக் கொண்டு எவருக்கும் எதிர்ப்பின்றி எல்லோரும் ஏற்கும் பெற்றிமையுடன் உயிரைப் பற்றி வள்ளுவர் உரைத்ததைப்போன்று உலகில் உரைத்தார்களில்லை எவரும். உயிர் ஏன் பிறக்கிறது என்ற வினவுக்குத் தொன்மை காலத்தில் வள்ளுவர் விடை யளித்ததைப் போன்று எவரும் அளித்தார்களில்லை. "அவா" பிறப்பதற்குக் காரணம் என்றமையால் உயிரானது வினையில் இயல்பாகவே சிக்கி அனுதியாகவே உள்ளதென்பது துளக்கமற விளங்குகிறதல்லவா? உயிர் ஒன்று அல்லவென்றும உயிர்கள் பலவென்றும் உயிர் அன்பின் வழியது ஆகி ஒல்லும் வகை

யான் உலகியலை ஏற்று ஓயாது அறம் புரிந்து ஒழுக்கத்தை இறுகப் பற்றி ஓம்பி அறிவியலுடன் இலங்க வேண்டுமென்பதின் மாண்பு மதித்தற் கரிது!

பொருட் செல்வத்தினும் அருட் செல்வம் சிறந்ததென் றுரைத்து அருட் செல்வம் பெற்றவர்கள் இருள் சேர்ந்த உலகம் புகாது நலமுறுவ ரென்றும் பொருட் செல்வத்தைப் பகிர்ந்து ஈந்து வாழும் பெற்றிமை யொன்றே உயிருக்கு உயரிய பெரும் புகழென்றும் உயிரைப் பிணைத்திருக்கும் தான் என்பதை அறவே அழித்தால் இறவாத் தன்மையுடைய ஏனைய உயிர்களும் வணங்குமென் றுரைத்த வள்ளுவனின் உயர்வு பெரிதும் பாராட்டற் குரியது.

உயிர் இறவாத்தன்மையதாதலின் இறந்துபடும் உடலில் வாடகைக் கிருப்பது போல் இருக்கிறதென்றும் உடலை விட்டு உயிர் அகன்ற பின்னர் மீண்டும் அவ்வுடலில் உயிர் தங்குவதில்லை என்றும் நாள் ஏற ஏற உடலிலிருக்கும் உயிரின் காலம் குறைகிறதென்றும், உலகில் உள்ளவரை நல்வினை ஆற்றிக்கொண்டே இருக்கவேண்டுமென்றும், விழிப்பதைப் போன்று பிறப்பென்றும் உறங்குவதைப் போன்று இறப்பு என்றும் உறங்குவதும் விழிப்பதும் எத்தகைத்தோ அத்தகைத்து பிறப்பு இறப்பு என்றும் விளக்கி உயிரானது ஓய்வுறுது பிறந்த வண்ணமாயிருக்குமென்றும் பிறவியைத் தடைப்படுத்த சிறப்பாகிய செம்பொருளைக் காண வேண்டுமென்றும், சிறப்பாகிய செம்பொருள் பற்றற்றதென்றும், பற்றற்ற செம்பொருளைப் பற்றுடைய உயிர்கள் பற்றினால் பற்றற்ற பெருநிலை எய்திப் பிறவிக் கடல் நீந்தி பிறவாத் தன்மை எய்தவியலு மென்றும், இந் நிலை தான் பேரா இயற்கை நிலை என்றும் இந் நிலை எய்தலே உயிர்களின் முடிந்த முடிபென்றும் முழக்கிய சிறப்பு என்னே!

உயிர் அவாவை உடையதென்றும் அவாவை அகற்றுவதே உயிரின் இறுதி என்றும் அதற்கு ஒழுக்கம் பற்றி அறவினை யாற்றி பற்றற்றவனைப் பற்றிப் பிறவி யறுத்துப் பேரா இயற்கை நிலையை அடைய வேண்டுமென்ற பொது உண்மையை உரைத்து மயக்காமல் துளக்கமற விளக்கிய தகவுடைய வான்புகழ் வள்ளுவனுக் குவமை யுண்டோ குவலயத்தில்?

வாழ்க வள்ளுவன்.

## பல்லாவரம் பொதுநிலைக் கழகத் தலைவர்

## உயர்திரு. மறைமலையடிகளின் மறைவு குறித்து

## அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறை

## விரிவுரையாளர் E. S. வரதராஜய்யர் B. A.

## பாடிய கையறுநிலை

---

(1) கலைவாணர் தமையெண்ணிற் கணையாழி
விரல் மடக்கும் கருத்தின் றாக
அலைவாரி பருகிநின்ற குறுமுனிபோல்
தமிழ்முந்நீர் அகத்துட் கொண்டாய்
மலைவாணர் செல்விமகிழ் மயில்வீரற்
கன்பமறை மலையே யந்தக்
கொலைவாளன் மறலியுனைக் கொடுசென்றான்
கலைபயிலக் குறித்தான் கொல்லோ.

(2) நறைமலிந்த தண்டமிழின் காவியங்கள்
இலக்கணங்கள் நலமா ரின்பத்
துறைமலிந்த தொகைநூல்கள் பலசமயத்
துறைநூல்கள் துவரக்கற்றே
நிறைமதிய மெனத்திகழ்ந்த மறைமலையே
கீழ்த்திசைக் கோனிலத்துற் றாயோ
கறைமலிந்த கண்டனுறை கயிலைநகர்
கண்ணினையோ கலைஞர் கோவே.

(3) செந்தமிழின் பேரறிவின் பயனாகும் சித்தாந்தத்
தெளிவை யெல்லாம்
சந்தமுறப் பேரறிஞன் உயர்சோமசுந்தரன் பாற்
சார்ந்து கற்றாய்
மந்தனமா மறைபயின்றாய் மறைமலையே
உரையாற்றும் வன்மை சான்றாய்
அந்தமிழா ரணங்கயரப் பலர்துயர
விடுத்தகன்றா யாண்டுற்றாயே.

(4) தண்டமிழ்தேர் வான்விழையும் தகவினர்கண்
சார்ந்தணையும் தருவே உண்ணும்
அண்டரமு தெனவுரைகள் அநவரதம்
பொழிவானே அறிஞர் போற்றக்
கண்டனைய பலபொருள்கள் கொண்டுரைக்கும்
கலைநிதியே தமிழ்த்தாய்க் கான
தொண்டியற்றிப் புவிவிடுத்தாய் மறைமலையே
தமிழறிஞர் துயருற் றாரே.

(5) வண்கவிஞன் உயர்காளி தாசனருள் சகுந்தலைமான்
வளமார் காதை
மண்களிக்கத் தண்டமிழின் வகுத்துயர்ந்தாய்
உரைநூல்கள் வரைந்தாய் செய்ய
பண்கனிந்த பாக்கள்பல பகர்ந்திட்டாய் தமிழறிஞர்
பரிவுற் றேங்கிக்
கண்கலுழ விண்படர்ந்தாய் தமிழ் கற்றோர் ஆண்டு
ண்டோ கவிஞ ரேறே.

(6) இன்பாருந் தமிழ்க்கலைக ளினிற்சிறந்தாய்
ஆங்கிலமு மினிதுகற்றாய்
அன்பார வடமொழியு மறிந்துயர்ந்தாய்
பலசமய வறிவு சான்றாய்
துன்பாக்கும் புவிவலயத் தொடர்பென்றே
நிலவாழ்வு துறந்தா யேனும்
வன்பாரு முளத்தினை நீ மறைமலையே
தமிழ்ப்பயிரை வளர்ப்பார் யாரே.

முத்தமிழும் நல்ல முறையி லறிந்துணர்ந்த
உத்தமவே தாசலப்பேர் ஒண்கதிரோன்—அத்தமித்தான்
கன்னித் தமிழ்த்தாய் கலங்கப் புலவரெலாம்
இன்னற்கண் ணீர்விட் டிட.

(200-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மா. ஐயா, எனது கருவியில் அமைந்துள்ள இசை நரம் பேழில் ஏழாமிசைமாகிய விளரி நரம்பினலகுகள் இருபத்தி யொன்றே.

ஆ. ஆம். இருபத்தியொன்றும் பதின்மூன்றும் முப்பத்தி நான்கு தான அலகு இருபத்திரண்டைக் கழித்தால் எஞ்சுவது பன்னிரண்டலகுகள்.

மா. ஐயா, எனது கருவியின் கைக்கிளை நரம்பிற்குரிய அலகுகள் பன்னிரண்டே.

ஆ. ஆம். பன்னிரண்டோடு பதின்மூன்று கூட்ட இருபத் தைந்து. இவற்றுள் இருபத்திரண்டு கழிபெற்றால் எஞ்சி நிற்கு மலகு மூன்று.

மா. ஐயா, எனது கருவியில் தாரத்தினந்தரம் மூன்றலகு.

ஆ. மூன்றும் பதின்மூன்றும் பதினாறு.

மா. ஐயா, பதினாறு அலகுகள் உழையினந்தரத்திற்குரி யவை.

ஆ. ஆம், ஆம். இனி பதினாறோடு பதின்மூன்று கூட்ட இருபத்தி ஒன்பது. தான அலகு இருபத்திரண்டு கழிபெற எஞ்சி நிற்பது ஏழலகு.

மா. ஏழலகு குரலந்தரத்திற்குரியது.

ஆ. ஆம். ஏழும் பதின்மூன்றும்.

மா. இருபது. இவ்வலகுகள் இளியந்தரத்திற்குரியவை.

ஆ. ஆம். அவ்வலகுகளோடு பதிமூன்றைக் கூட்டிப் பார்க்கலாம்.

மா. இருபதும் பதின்மூன்றும் முப்பத்தி மூன்று. இவற்றுள் தான அலகு இருபத்திரண்டைக் கழித்தால் எஞ்சுவது பதினோ ரலகு. இவ்வலகுகள் துத்த அந்தரத்திற்குரிய தாகும்,

ஆ. ஆம். இங்கு ஒரு நுட்பக் கருத்துளது. இவ்வாறு அமையப்பெறுகின்ற பதினேரலகோடு முதற் கருவியின் அமைப்பு முடிவடைகின்றது. மேலும், இனி நாம் கணித்தறியப் போகும் நட்பு முறையிலும் இது போன்று பதினேரலகு உள்ள இசையிடம் ஒன்று தோன்றும். இவற்றுள் கிளைமுறையில் தோன்றிய இப்பதினேரலகு வலிந்த குரலாகவும் நிற்கும். பின்னர் நட்பு முறையில் தோன்றும் பதினேரலகு வலிந்த துத்தமாகவும் நிற்கும். ஆகவே, இவ்விரண்டு பதினேரலகும் இருவேறு மதிப்பினையுடைய நீர்மையதாகும். மேலும் தான அலகு நிலையெண்களாகிய இருபத்திரண்டின் சமக் கூறு பதினொன்று என்று அறிவோமாதலின், அவ்வாறு அமைவுறும் பதினேரலகைக் கணித முறையில் இங்கு கண்டு மகிழ்கின்றோம். என்பதை நன்கு உணரவேண்டும்.

மா. ஐயா, இனி பதினொன்றோடு பதின்மூன்று கூட்ட இருபத்திநான்காகும் தான அலகு இருபத்திரண்டு கழிய எஞ்சுவது இரண்டலகே. இரண்டலகினுக்குரிய நரம்பு எனது கருவியில் இல்லை. இங்கு தாங்கள் கூறிய முதற் கருவியின் முடிபையும் உணர வாய்ப்பேற்படுகின்றது.

இ. மா. ஐயா, எனது கருவியில் முதல் நரம்பே இரண்டலகு பெற்று நிற்கின்றது.

ஆ. மாணவர்களே, நாம் கணித்தறியும் முறைப்படி வந்த இரண்டலகு இரண்டாங் கருவியின் முதல் நரம்பாக நிற்றலின் இனி இரண்டாங்கருவி மாணவரே அலகுத் தொகையினை, கூட்டி தனது கருவியிலமைந்த இன நரம்புகளை யறிந்து கூறட்டும்,

இ. மா, ஐயா, யாவும் தெளிவாகக் கூறுகின்றேன். எனது கருவியைப் பற்றியே கூறுகின்றேன். முதல் நரம்பு இரண்டலகு பதின்மூன்று கூட்ட பதினைந்தலகாகி உழை நரம்பாகின்றது. இதனோடு பதின்மூன்று கூட்ட இருபத்திஎட்டலகாகி தான அலகு இருபத்திரண்டு கழிய ஆறலகு எஞ்சி நின்று குரல்

நரம்பாகிறது. அதனோடு பதின்மூன்று சேர பத்தொன்பதாகி இளி நரம்பாகிறது. பத்தொன்பதும் பதின்மூன்றும் முப்பத்திரண்டு. இவற்றுள் இருபத்திரண்டு கழிய எஞ்சு மலகு பத்து இதுவே துத்த நரம்பு. பின்னர் பத்தும் பதின்மூன்றும் இருபத்தி மூன்று இதுவே, எனது கருவியில் கடையாய நரம்பாம் விளரியாகும். இவற்றுள் இருபத்திரண்டு முறைமையானே கழிய எஞ்சுவது ஓரலகு. ஓரலகைக் காட்டும் நரம்பு இங்கு வைத்திருக்கும் நான்கு கருவிகளிலும் இல்லை.

ஆ. ஏன் இல்லை.

மா. ஐயா, நம்மால் அறிந்துணரப்படுகின்ற அலகுக் கணித முறையில் ஓரலகு என்பதை கணித வாயிலாக இங்கு தான் அறிகின்றோம். மேலும் ஓரலகு என்பது மிகவும் அண்மையில் நுண்மையாக ஒலிக்கும், அலகுகள் இரண்டிற்கு மேற்பட்டாலன்றி ஓசையை உணர வாய்ப்பேற்பட வழியில்லை.

ஆ. பின்னர், ஓரலகை உங்கள் கருவியில் எவ்வாறு தான் உணருவீர்கள் ?

மா. ஐயா, இவ்வோரலகை முதற் கருவியில் முதல் நரம்பாகிய தார நரம்பிற்கு ஒரு நொடி யளவின் ஓசை யெனவே கொள்ளவேண்டும்.

ஆ. ஆம். ஆம். இவ்வாறு அமைவுறும் ஒரு நொடி யளவே தான் நாம் யாவரையும் இவ்வாராய்ச்சியில் ஈடுபடச் செய்தது. மேலும், இவ்வோரலகு போன்று இருபத்திரண்டு அலகு தான் ஒரு தானத்திடை யமைகின்றது.

மா. ஆம் ஐயா, நன்கு உணர்ந்தோம். இனி ஒன்றும் பதின்மூன்றும் பதினான்கு இவ்வலகுகள் கைக்கிளை நரம்பிற்குரியவை. நிற்க, இவ்வோரலகினால் நாம் அறிவது கைக்கிளை நரம்பு பின்னர் காணப்பட்டதே என்றும் உண்மையே.

ஆ. ஆம், ஆம். கைக்கிளை நரம்பு பின்னர் சேர்த்து அறியப் பட்டதென்பதற்கு கணித முறை பிறழாது ஆராய்ந்து செல்லச் செல்ல சான்றுகள் நன்கு கிடைத்துக்கொண்டே யிருக்கும்.

மா. இனி, பதினான்கோடு பதின்மூன்று கூட்ட இருபத்தி யேழு தானஅலகுகள் இருபத்திரண்டு கழிபட எஞ்சுமலகு ஐந்து. இவ்வலகுகளைக் கொண்ட நரம்பு தாரத்தினந்தரமாகும். பின்பு, ஐந்தும் பதின்மூன்றும் பதினெட்டு. இதுவே உழையி னந்தரம். பதினெட்டும் பதின்மூன்றும் முப்பத்தியொன்று முப்பத்தியொன்றில் தானஅலகுகள் கழிபெற எஞ்சுவது ஒன்பது அலகு.

ஆ. மாணவர்களே, நமது கிளைகூட்டுக் கணித முறை யாராய்ச்சி இத்துடன் முடிவு பெறுகின்றது. கிளையின் கூட்டு நட்பில் முடியவேண்டும் என முன்னமேயே கூறியுள்ளேன். நட்பலகு ஒன்பது என்பதை நீங்கள் யாவரும் நன்குணர்வீர்கள். இனியும் நாம் ஒன்பதோடும் பதின்மூன்றைக் கூட்டினோமானால் இருபத்திரண்டு அலகுகள் ஆகும். இருபத்திரண்டு அலகுகள் தானத்தினலகு என்பதை நாம் உங்களுக்கு இனிக் கூற வேண்டுவதே யில்லை. இருபத்திரண்டில் இருபத்திரண்டு கழித்தால் ஒன்றுமில்லை எனும் பொருளைக் காட்ட சுன்னக் குறியாகிய வட்டக்கோட்டினை யிடவேண்டும். மேலும் நீங்கள் ஒன்பது எனும் எண்ணைக் கண்டதும் இனி ஒன்பது ஒன்பதாகக் கூட்டி யறிந்து செல்லவேண்டு மென்பதே உண்மையாகும். அவ்வாறு கூட்டிச் செல்வது நட்பலகுக் கணித முறையாகும். அதனைத் தனியே நாளை நூல்களில் ஒருவர் தெளிவுபடக் கூறு வீர்களென நம்புகின்றேன். இனி எல்லோரும் சென்று வாருங்கள்.

(தொடரும்)